குருபாதம்

Regd. No. M. 4454.

# ஞானசம்பந்தம்

[illegible]புர ஆதீனத் திங்கள் வெளியீடு

சுபாநு[illegible] சித்திரைமீ — MAY 1943.



**ஸ்ரீ-ல-ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்.**

*கண்ணாகிக் கண்ணுள் மணியாகிக் காட்டுங்கதிரொளிபார்*
*விண்ணாகித் தேயுவளியாகி யெங்கும்விளங்கி யக*
*மெண்ணாமுனேகி யடியாரைக் காக்கவெழுங் கருணைத்*
*இன்னா தருமைத் திருஞானசம்பந்த தேசிகனே,*

குருபாதம்


# திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீன மடாலயத்திலும் ஆதீனத்துக்குச் சொந்தமான தேவஸ்தானங்களிலும் நடைபெற்ற சமயப் பிரசாரங்கள்

ஆதீனமடாலயத்தில் 14—4—43 புதுவருடப் பிறப்பன்று தேவகோட்டை "பாலகவி" வயிநாகரம் திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள் 'தெய்வப்பாவை' என்பதுபற்றியும், காஞ்சிபுரம், வித்துவான் திரு. S. அருணைவடிவேலு முதலியார் அவர்கள் "ஞானசம்பந்தர் நல்லுபதேசம்" என்பதுபற்றியும் விரிவுரைகள் நிகழ்த்தினார்கள்.

வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம் ஸ்ரீ ஷண்முக விலாசப் பிரசாரசபா மண்டபத்தில் 5—5—43 கிருத்திகைத் திருநாளன்று தருமபுர ஆதீன நூல்நிலைய மேற்பார்வையாளர் வித்துவான், திரு. மு. ஆறுமுக தேசிகர் அவர்கள் "குமரகுருபரர்" என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானம் சைவ சமயப்பிரசார சபாமண்டபத்தில் பிரமோற்சவ நாட்களாகிய 12, 13, 14, 15, 16—4—43 ஆகிய ஐந்து நாட்களிலும் முறையே சென்னை, வித்துவான், திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்கள் 'சேரனும் சுந்தரனும்' என்பதுபற்றியும், மாயவரம், வித்துவான், திரு. S. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் 'கயிலைக்காட்சி' என்பது பற்றியும், காஞ்சிபுரம், திரு. பொன். சண்முகனார் அவர்கள் 'வேல்லுமாமிகவல்ல மெய்ப்பொருள்' என்பது பற்றியும், தஞ்சை, வித்துவான், திரு. த. ச. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்கள் 'தலைவன்றளிற் றலைப்பட்டான்' என்பதுபற்றியும், சிதம்பரம், வித்துவான், திரு. ச. சேதுசுப்பிரமணியப் பிள்ளை அவர்கள் 'அன்புமிக்க அம்மையார்' என்பது பற்றியும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள்.

திருவாரூர் ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில் 14—4—43, 20—4—43 ஆகிய இரண்டு நாட்களிலும் முறையே அண்ணாமலைப்



உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

சென்னை-600 008

மெய்கண்ட தேவ னருளாற் சிவாகம மெய்ப்பொருடேர்ந்
தையமின் மெய்யடி யாருக் களித்ததை யாய்ந்தவர்போற்
பையவுள் வந்து பொருண்மாறு பீடு பகர்ந்தவர்க்கே
செய்ய பொருளவன் செப்பிய வாறிவண் செப்புதுமே.

—சித்தாந்த நிச்சயம்.


| மலர் 2 | சுபானு ௵ சித்திரை ௴<br>MAY 1943 | இதழ் 6 |
|---|---|---|

இதழாசிரியர்:—

தருமபுர ஆதீனம், ஒடுக்கம் - சிவகுருநாதத் தம்பிரான்.


உள்ளுறை


1. சிவாகம சீலம். 197

2. ஈன்றாளுமாய் எனக்கெந்தையுமாய்—
வித்துவான், திரு. K. M. வெங்கட்டராமையா அவர்கள்,
M.A., B.O-L செங்கற்பட்டு. 200

3. பத்தித் தனித்தெப்பம்—
திரு. R. சண்முகசுந்தரஞ் செட்டியார் அவர்கள்,
சென்னை. 205

4. சைவத்திருமுறைகள்—
வித்துவான். திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்கள்,
சென்னை. 207

5. தேவாரப் பண்கள்—
திரு. S. இராமலிங்க ஓதுவார் அவர்கள்,
தேவார ஆசிரியர், சிதம்பரம். 212

6, பொற்கைப்பாண்டியன்—
சிவக்கவிமணி திரு. C. K. சுப்பிரமணிய முதலியார்
அவர்கள், B. A., கோவை. 214

7. ஞானமகளார் மார்பணி நன்மணி—
வித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள்,
திருவாரூர். 222

8. The Gleanings from Saiva Siddhantha—
Sri. R. Shanmukhasundaram Chettiar, Madras. 225

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

குருபாதம்

# ஞானசம்பந்தம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க வாடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினாய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (திருஞா-தே)

திருச்சிற்றம்பலம்

---

## சிவாகமசீலம்

(165-ம் பக்கத்தொடர்ச்சி.)

### வைகறைச் சிவத்தியானம்

இனிச் சிவாகமசீலங்கள் அனைத்தினுக்கும் இன்றியமையாததாய் முதற்கட் செய்யற்பாலதாகிய வைகறைச் சிவத்தியானங் கூறற்பாற்று.

**प्रातःकाले समुत्थाय शिवं संचिन्तयेत्सुधीः**

வைகறை வேளையில் வளர்துயி லுணர்ந்தே சிவனடி சிந்தனை செய்கநல் லறிஞன் எனச் சிவாகமம் விதித்தலின் பெறுதற்கரிய மனிதப்பிறவியைப் பெற்றதனால் எய்தும் நிலைபேறான இன்ப வாழ்வைப் பெற விரும்பும் நல்லறிவாளர் யாவரும் அருணோதய விடியற்காலத்தில் சிவபெருமானைச் சிந்தனை செய்யக்கடவர். ஞாயிறு தோன்றுதற்கு முன் ஐந்து

நாழிகையுள்ள காலம் பிராதக்காலம், பிராமமுகூர்த்தம் என்பன முதலிய பெயர்களால் வழங்கப்படும். இதுவே வைகறைக்காலம். அக்காலமே இறைவனைச் சிந்தித்தற்கு உள்ளந் தெளிவுறுங் காலமாம்.

நித்திரை செய்யப்புகும்போது தத்தமக்குரிய சிவசிந்தனையிலே அழுந்திய பழக்கமுடையவர் துயினீங்கி யெழும்போதே அச்சிந்தனையோடு வழிபடா நின்றே எழுவர். "தம்மையே சிந்தியாவெழுவார் வினைதீர்ப்பரால்" "தொழுதெழுவார் வினைவள நீறெழ நீறணி யம்பலவன்" என்பன முதலிய திருமுறைத் திருவாக்குக்கள் இச்சிந்தனையை விதந்து கூறும். அப்பழக்கமில்லாதார் துயிலுணர்ந்து எழுந்து தொழுவார். இவ்விரு திறத்தாருக்கும் இங்குக் கூறும் தியான விதி பொதுவேயாம்.

சீர்தங்கு செங்கதிர்க்கீழ்த் திக்கெழுமுன் னர்க்கடிகை
ஓரைந் தெனவெழுந்தே யோர்ந்து.

சுசியெனினு மன்றெனினுங் கூடியமெய்ச் சுத்தி
இசைவாகச் செய்துநீ றிட்டு.

எண்சமயி ருத்திரனை நெஞ்சிற் சதாசிவனை
எண்கிரியை யானுமரங் கே.

யோகிவிந்து நாதம் புருவநடு வுண்ஞானி
சோகம்பா வித்திடுக தோய்ந்து.

இன்ன லறவியன்ற வாறுசெபித் தேமூலம்
மன்னுமரன் றுளிணையும் வாழ்த்து.

பூதி யணிந்தே புறத்திற் புறப்படுக
பூதியணி யாதொழிந்த போது.

அற்றைக் குபவசியா யானைந் திணையருந்த
லுற்றே யிருநா ளுரை.

என்னும் நித்தியகருமநெறிக்குறட் பாடல்கள் ஈண்டுச் சிந்தித்தற்குரியன. ஞாயிறு தோன்றுதற்கு ஐந்து நாழிகைமுன் நித்திரைவிட்டெழுந்து இயன்றமட்டுஞ் சுத்திசெய்து, போகம் விரும்புவோர் கிழக்குமுக மாகவும், வீடுவிரும்புவோர் வடக்குமுகமாகவும் இருந்து திருவெண்ணீறு பூசி, தமது குருவின் திருவடித் தாமரைகளைச் சிரசிலே சிந்தித்துப் பின் சமயி யானவன் இதயகமல நடுவிலே உருத்திரமூர்த்தியையும், புத்திரகன் இதயகமல நடுவிலே சதாசிவமூர்த்தியையும், யோகி புருவ நடுப்பிரமரந்திரங்களில் முறையே விந்து நாதங்களையும் தியானிக்கக் கடவர். ஞானிகள் சிவோகம் என அத்துவித பாவனை செய்யக்கடவர். இங்ஙனம் தியானபாவனைகள் செய்யும்போது தத்தமக்குரிய முறையால் திருவைந்தெழுத்தைச் செபித்துக்கொண்டே செய்தல் வேண்டும். பின் சிவனையும், குருவையும் வணங்கித் துதித்து எழுந்திருக்கக்கடவர்.

சிவதீக்கையில்லாது சிவவழிபாடு செய்வோர் சிவவடிவங்களுள் தத்தமக்கு விருப்பமான ஒரு வடிவத்தையேனும், சிவகுமார வடிவங்களுள் ஒன்றை யேனும், சிவசத்தி வடிவங்களுள் ஒன்றையேனும் தியானித்து வணங்கித் துதித்து எழுந்திருக்கக் கடவர்.

விடிதலுமே வெண்ணீற்றை மெய்யிற்பூசித் திருவைந்தெழுத்தை ஓதி யாதேனுமொரு சிவ வடிவத்தைத் தியானித்து வணங்கித் துதித்துக் கொண்ட பின்பே மற்றைய கருமங்களைச் செய்தல் வேண்டும். தோத்திரங்களுள் தேவாரம், திருவாசகம் முதலிய சைவத் தெய்வத் திருமுறைப் பாடல்களே மிக மேலானவை. திருவாசகத்தின் முதலிலுள்ள **"நமச்சிவாய வா(அ)ழ்க"** என்னும் சிவபுராணத்தை வைகறையிலேயே பொருளுணர்ச்சியோடு நியமமாக ஓதுவோர் இம்மையிலே எல்லா இன்பமும் எய்தி வாழ்ந்து பின் சிவபுரத்திலே சென்று பேரின்பம் பெற்று வாழ்வர். (வரும்)

# ஈன்றாளுமாய் எனக்கெந்தையுமாய்

(வித்துவான். திரு. K. M. வெங்கட்டராமையா அவர்கள் M.A., B.O L.,)

திருப்பாதிரிப்புலியூர்ப் பாங்கரில் கரையேறிய நாவுக்கரசர் அடியார்களோடு திருப்பாதிரிப்புலியூரில் வீற்றிருக்கும் சிவபெருமானை வணங்கி **ஈன்றாளுமாய் எனக்கெந்தையுமாய்** என்று எடுத்துத் 'தோன்றாத் துணையாய் இருந்தனன் தன் அடியோங்களுக்கே' என்று முதற்பாடலை முடித்துப் பதிகமொன்று பாடினார்.

இப்பதிகத்து முதற் செய்யுளில் சிவபெருமான் அடியார்களுக்குத் தாயாகவும், தந்தையாகவும், உடன் தோன்றினராயும் விளங்குவாரென்றும், 'தோன்றாத் துணையாய்' இருப்பவரென்றும் குறிக்கப்பெற்றுள்ளன. கல்லிற் பூட்டிக் கடலிற் பாய்ச்சப்பட்ட காலத்து அரிய அஞ்செழுத்தையும் அரசு போற்றிடக் கரு நெடுங் கடலினுட் கன்மிதந்ததே; அவ்வாறு மிதந்தது ஈசன் துணை செய்ததற்குச் சான்றாகும் அன்றே! இதனையே 'தோன்றாத் துணையாய் இருந்தனன்' என்று குறித்தனர் போலும். தோன்றாத்துணையாய் இருத்தலாவது அடியார் உணர்வில் வெளிப்பட்டு அவரைத் தன்வசமாக்கி அவருக்கு வரும் இடுக்கணை அவர் அறியாது களைதலாம்.

தன் அடியார்களுக்குத் தோன்றாத் துணையாய் இருப்பின், அடியார் அல்லாதார்க்கு ஈசனார் எத்தகையர் என்ற வினா எழலாம். அவ்வினாவுக்கு விடை 'மற்றெவ் வுயிர்க்கும் சான்றாம் ஒருவனை' என்று சேக்கிழார் விடைபகர்வர். மற்றெவ்வுயிர்க்கும் சான்றாய் நிற்றலாவது அடியார் அல்லாத பிறவுயிர்களுக்கும் சீவ சாட்சியாய் மறைந்திருத்தலாம். அதாவது அவ்வுயிர்களறியாது அவ்வுயிருட் கலந்து வினைவழி யுணர்த்தி

அந்தரியாமியாய் நிற்றலாம். 'தோன்றாத் துணையப்பர்' என்பது திருப்பாதிரிப்புலியூர் இறைவன் திருநாமம்.

இரண்டாவது பாடலில் 'முற்றா முளைமதிக் கண்ணியினான்தன் மொய்கழலே புகல் நமக்கு (என்று) கண்டேன்' என்று குறித்தனர். மதி கலையிழந்து சரண்புக அதனைக் காத்தவர் பரமனாகலின் தன்னையும் அப்பெருமானாரே காப்பார் என்று கொண்டு முற்றா முளைமதிக் கண்ணியினான் என்றார்.

மூன்றாம் திருவிருத்தத்தால் தமக்குத் துன்பம் இனி யில்லையென்று குறித்திருக்கிறார். 'இனி நமக்கு இங்கு அடையா அவலம்' என்றமை இதனை வற்புறுத்தும். இனி அவலம் அடையா என்றமையால் இதுவரை வினைவயத்தால் ஏற்பட்ட சமணவரசன் விதித்தவாதனைகள் அனுபவித்தாயின வென்றும்; இனி ஆகாமியம், பிராரத்தம், சஞ்சிதம் என்னும் வினைப் பயனால் அனுபவிக்கவேண்டியன எவையும் இலவாம் என்றும் அறியத்தகும். 'அருவினை சாரா' என்றமையுங் காண்க. முன்னர் 'நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்' என்றவிடத்துக் குறித்தது போல, ஈண்டும் இப்பாடலில் 'நமனை அஞ்சோம்' என்று குறித்துள்ளார். இவ்விரண்டிற்கும் உள்ள வேற்றுமையினை ஈண்டுச் சிறிது காண்பாம்.

பல்லவ அரசனது மந்திரிமார்க்குப் பதில்கூறும் போது 'நமனை யஞ்சோம்' என்று கூறியது, எதற்கும் தாம் பயப்படாத் திறனைக் காட்டும். சாத்தண்டனை விதித்தாலும் 'யாம் பயப்படோம்' என்று தம் தைரியத்தைக் குறித்தார் என்று கொள்ளும் தகைமைத்து. சிவஞானசித்தியார் 'எங்கும் யாம் ஒருவர்க்கும் எளியோம் அல்லோம்' என்று கூறும். அணைந்தோர் தன்மையை இப்பெருமானார் எய்தினர் என்பதைக் குறிக்கும்.

இப்பதிகத்தில் 'நமனை யஞ்சோம்' என்றது அவருடைய அனுபவமேயாகும். அரசன் அப்பரை வெந்நீற்றறையிலிட அஃது 'ஐயர் திருவடி நீழல் அருளாகிக் குளிர்ந்தது.' உயிரை அரிக்கும் நஞ்சு வினையயறுத்து உயிர்க்கு அமுதாயிற்று. யானையோ அஞ்செழுத்தாகிய அங்குசமேந்திய அப்பரை யணுகாது அகன்றோடியது. புனித வெண்ணீற்றொடு புண்ணியன்போந்தது, தான் செய்புண்ணியம் என்னக்கொண்டு தன் திரைக் கரங்களால் அப்பர் பெருமானைக் கடல் கரையேற்றியது. இவ்வாறு நாணிலமண் பதகருடன் ஒன்றிய மன்னவன் சூழ்ச்சியைத் திருத்தொண்டின் உறைப்பாலே வென்றனராகையால் தாம் நமனையஞ்சுதல் வேண்டியதில்லை என்றுகொண்டு **நமனை யஞ்சோம்** என்று குறித்தார்.

'விடையான் விரும்பி என் உள்ளத்திருந்தான்' என்று தொடங்கும் இத்திருவிருத்தத்தோடு 'தனித் திருத்தாண்டகம்' 2-வது செய்யுள் சொல்லும் பொருளும் ஒத்திருத்தல் காண்க.

> வெம்பவரு கிற்பதன்று கூற்றம் நம்மேல்
> வெய்யவினைப் பகையும் பைய நையும்
> எம்பரிவு தீர்ந்தோம் இடுக்கண் இல்லோம்
> எங்கெழிலென் ஞாயிறு எளியோம் அல்லோம்
> அம்பவளச் செஞ்சடைமேல் ஆறு சூடி
> அனலாடி ஆனஞ்சும் ஆட்டு கந்த
> செம்பவள வண்ணர்செங் குன்ற வண்ணர்
> செவ்வான வண்ணர்என் சிந்தையாரே"

4-வது செய்யுளில் 'மலைமகட்கே நேய நிலாவ இருந்தான் அவன்றன் திருவடிக்கே தேயமெல்லாம் நின்றிறைஞ்சும்' என்ற பகுதியுள்ளது. தேயமெல்லாம் நின்றிறைஞ்சுவது ஏன் எனில் ஆணவம், மாயை, கான்மியம் என்னும் மும்மலங்களும் செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டாது தடுக்குமாகலான், அம்மும்மலங்களையும் களைதற்பொருட்டாகும். இதனையே இச்செய்யுளில் 'மாய

மெல்லா முற்றவிட்டு இருள் நீங்க' என்றார். 'மாயமெல்லாம்' என்றதால் மாயாமலத்தையும், 'இருள்' என்றதால் ஆணவ மலத்தையும் குறித்து 'அருவினை சாரா' (3-ம் திருவிருத்தம்) என்றதுள் 'அருவினை' என்று கான்மியத்தைக் குறித்தார்.

தேய மெல்லாம் நின்றிறைஞ்சக் காரணம் 'அவன் தொழுவார்க் கிரங்கி அருள் செய்வன்' என்று எட்டாம் செய்யுள் குறிப்பிடும். இறைவன் இவ்வாறு பேர் இரக்கத்தோ டருள்செய்வான் என்பதைக் கங்கையைச் சடைமேல் ஏந்திய கருணைச் செயலினால் குறித்தார். 'தொழுவார்க் கிரங்கி யருள்செய் தீவண்ணன்' எனில் எவ்வாறு இருந்து அருள் செய்குவன் என்பதைத் 'தோன்றாத் துணையா யிருந்தனன்' என்றதால் குறித்தார். இனி என்ன அருள் செய்குவர் எனில், "முத்தி தரும் தாளிணை' என்று 10-வது பாடலில் குறிப்பதால் 'முத்தி தருவர்' என்றும், 'தருவாய்' சிவகதி என்றமையின் அம் முத்தியாவது சிவகதிப்பேறு என்றும் அறியலாம்.

இனி, தொழுவார்க்கிரங்கி அருள் செய்யும் பரமன் தொழாதாரை என்ன செய்குவன் எனில் 'பொருந்தா அரக்கன் உடல் நெரித்தாய்' என்றதால் தொழாதவர் பாடு இராவணன் பட்டபாட்டிற்குச் சமமாகும் என்று ஊகித்தறியுமாறு வைத்தனர். 'சார்ந்தவர்க்கலால் நலமிலன்' என்று நமச்சிவாயத் திருப்பதிகத்தும் கூறியமை காண்க.

நாளும் பொருள் சேமித்து வைத்தால் அப்பொருள் வேண்டும்போது உதவும். பொருளை நாடோறும் சேமித்து வைத்தல் போல் நாளும் பஞ்சாக்கரத்தை ஓதியிருத்தல் வேண்டும். பொருளைப் பெட்டியில் வைத்து பூட்டுதல் போலச் 'சிவாயநம' எனும் நாமமந்திரத்தை மனமாகிய பெட்டியில் வைத்துப் பூட்டுதல் வேண்டும். இதனை 'வைத்த பொருள் நமக்காமென்று மனத் தடைத்து' என்று கூறுதல் காண்க.

பஞ்சாக்கரம் ஓதுமாறு மூவகைப்படும்; சத்தம், மானதம், மந்தம் என்பன. இம்மூவகைகளுள் சத்தமாக உச்சரித்தலைச் 'சொல்லி' யென்றதாலும், மானதமாக உச்சரிச்சலை 'மனத்தடைத்து' என்றதாலும், மந்தமாக உச்சரித்தலைச் 'சித்தமொருக்கி' என்றதாலும் குறித் தருளினர்.

இனி ஞானம்தானே நான்கு வகைப்படும். "கேட்டலுடன் சிந்தித்தல் தெளிதல் நிட்டை கிளத்தல் என ஈரிரண்டாம் கிளக்கின் ஞானம்" என்றார் அருணந்தி சிவாச்சாரியர். 'சிவாயநமவென்று சொல்லி' என்றதால் (குருஉபதேசிக்கக்) கேட்டலும், 'மனத்தடைத்து' என்றதால் சிந்தித்தலும், 'சித்த மொருக்கி' என்றதால் தெளிதலும், 'இருக்கின்' என்றதால் நிட்டை கூடுதலும் ஆகிய நான்கையும் கூறியருளினர்.

'நமனை யஞ்சோம்' என்று கூறியவர் பிறத்தலும், இறத்தலும், உறங்கலும், விழித்தலும் போலும் ஆகலின் 'இனிப்பிறவாமல் வந்து ஏன்று கொள்ளே' என்றும், ஒருகால் பிறவிநேரிடின் 'சிவபெருமானை மறவா திருக்கவேண்டும்' என்பார் 'புழுவாய்ப் பிறக் கினும் புண்ணியா உன்னடி என்மனத்தே வழுவா திருக்க வரந் தரவேண்டும்' என்றும் கூறினர். 'நம்பர் அருளாமையினல்' பிறசமயம் புக்கவாறு ஈண்டு ஒப்புநோக்குக.

'திருந்தா அமணர் தீநெறிப்பட்டுத் திகைத்து முத்தி தரும் தாளிணைக்கே சரண்' புகுந்தமையாலும், கருவாய்க்கிடந்து பரமன் கழலே நினையும் கருத்துடை யர்ராதலாலும், உருவாய்த்தெரிந்து பரமன் திருநாமம் பயில்வதாலும், சிவாயநமவென்று நீறு அணிதலாலும் சிவகதி தருதல் வேண்டுமென்று வேண்டிக் கொள்ளு கிறார்.

குருபாதம்

# பத்தித் தனித் தெப்பம்

[திரு. R. சண்முகசுந்தரஞ் செட்டியார் அவர்கள், சென்னை.]

(169-ம் பக்கத்தொடர்ச்சி)

மக்கள் வழிபாட்டினை மன, மொழி, மெய்களால் புரிதல் வேண்டும். மனம் இறைவன் திருவுருவத்தை நினைதல், மெய் தனது கரங்களால் தொண்டுகள் புரிதல், மொழி இறைவன் பொருள்சேர் புகழ் கூறல் ஆகிய இவை அவைகளின் கடனும். உடலால் ஆக்கப்படுந் தொண்டுகளுள் மலரும் புனலும் கொண்டுவந்து இறைவனுக்கு நீராட்டி, பூச்சூட்டுதல் சிறந்ததாம். கொள்ளும் புனல் பரிசுத்தமாய் நுரையற்றதாக விருக்கவேண்டும். "நொச்சி யிலையும் நுரைதீர் புனலும்" என்றருளினர் சுந்தரர். மலர் மிகுதியாகவிருத்தல் வேண்டுமென்று ஆன்றோர் கருதினர். 'சாய்க்காட்டெம் பெருமாற்கே பூநாளும் தலைசுமப்பப் புகழ்நாமஞ் செவிகேட்ப நா நாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே', யோசனை போய்ப் பூக் கொணர்ந்தங் கொருநாளு மொழியாமே, பூசனைசெய் தினிதமர்ந்தான் புள்ளிருக்கு வேளூரே' எனவரும் திருப்பாடல்கள் சான்று பகர்கின்றன. மேலும் வேண்டப்பெறுவதாகிய பொருள்கள் சந்தனம் தூபதீபங்கள் முதலியனவாகும்.

நலமலிதருமறை மொழியொடுநதியுறு புனல்புகை யொளிமுதல்
மலரவைகொடுவழி படுதிறன்" —திருவீழிமிழலை.

நறைமலிதருமள ைெடுமுகை நகுமலர் புகைமிகுவளரொளி
நிறைபுனல்கொடுதனை நினைவொடுநியதமும் வழிபடு மடியவர்."
—திருச்சிவபுரம்.

"போதுஞ் சாந்தும் புகையுங் கொடுத்தவர்க்
கேத மெய்துத லில்லையே" —திருவேற்காடு.

"பொன்னியனறுமலர் புனலொடுதூபஞ்
சாந்தமுமேந்திய கையினராகிக்" —திருக்கழுமலம்.

எனவரும் திருஞானசம்பந்தர் திருவாக்குக்களும் காண்க. மெய்யினால் செய்யப்படும் தொண்டுகளுள் வணக்கம் இன்றியமையாதது. 'கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான், தாளை வணங்காத்தலை' என்றார் திருவள்ளுவனார். அதனையும் வழிபாடுகளுள் அங்கமாக,

"அஞ்சுமொன்றி யாறுவீசி நீறுபூசி மேனியில்
குஞ்சியார வந்திசெய்ய வஞ்சலென்னி மன்னுமூர்" —திருவாரூர்.

"தங்கை தலைக்கேற்றி யாளென்றடி நீழல்
தங்குமனத்தார்கள் தடுமாற்றறுப்பாரே" —திருநல்லூர்.

எனவரும் திருப்பாடல்களுள் திருஞானசம்பந்தர் விதித்தனர். மெய்த்தொண்டு இங்ஙனமாக, மன மொழிகளால் இறைவனை நினைத்தலும், அவன் புகழ்களைப் பாடுதலும் வேண்டும். தோத்திரங்கள் இன்றியமையாதன. அவையே இறைவனை மனத்தகத்தே இருத்தும் இயல்புடையன.

"நோய்புல்கு தோறிரைய நரைவரு நுகருடம்பில்
நீபுல்கு தோற்றமெல்லா நினையுள்கு மடநெஞ்சே
வாய்புல்கு தோத்திரத்தால் வலஞ்செய்து தலைவணங்கிப்
பாய்புலித் தோலுடையன் பருப்பதம் பரவுதுமே.
—திருப்பருப்பதம்.

"வந்தணைந் தின்னிசை பாடுவார் பான்மன்னினார்"
—திருவாவூர்ப் பசுபதீச்சரம்

என்று மொழிந்த தேவாரங்கள் இக்கருத்தினை வலியுறுத்தும். தோத்திரங்கள் இருவினைகளைச் சேராவகை செய்து உண்மைப் பயன்களைக் கூட்டுவன. வழிபாட்டு முறையைப் **பத்தித்தனித்தெப்பமாகத்** திருஞானசம்பந்தர் உலகுய்ய வருளினர். அஃது உயிர்களை என்றும் அழியா இன்ப வுலகினில் சேர்க்குந் திறத்தது. வழிபாட்டு நெறியாகிய சைவநெறியில் ஒழுகியுய்வோமாக.

குருபாதம்

# சைவத்திருமுறைகள்

[வித்துவான். திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்கள், சென்னை.]

## தமிழ்மறைப்பெருமை

தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும் முதலை
உண்ட பாலனை அழைத்ததும் எலும்புபெண் உருவாய்க்
கண்ட தும்மறைக் கதவினைத் திறந்ததுங் கன்னித்
தண்ட மிழ்ச்சொலோ மறுபுலச் சொற்களோசாற்றீர்

— பரஞ்சோதி முனிவர்

## குருஞானசம்பந்தர் வணக்கம்

அகவிருள் துறந்திடவும் அடியவர்க் குத்தீக்ஷை
ஆகமப்படி பண்ணவும்
அட்டமா சித்தியொடு மிந்திரா திபர்பதமும்
அலவலவெனத் தெளிந்தே
இகபர மிரண்டையு முணர்த்திடவு நிட்டையி
லிருத்திடவு மிரக்ஷிக்கவும்
இருளென்று வெளியென்று பஞ்சபூ தங்களன்
றென்றுசிவ கதிகாட்டவும்
பகர்வரிய சன்மார்க்க ஞானமோ க்ஷம்பெறும்
பான்மையை விரித்தோதவும்
பங்கயா சனனுமறி யாதகுடி லைப்பொருட்
பக்குவம் பார்த்தருளவும்
செகமீதி லிமசேது பரியந்த மிகவுள்ள
தேசிக ருனைப்போல்வரோ?
திகழ்ஞான சம்பந்த னேகமலை யதிபனே
சிவசமய குருராயனே

— தருமையாதீன தமிழாகரமுனிவர்

உலகில் இன்பத்தை விரும்பாத மக்களில்லை. அதிலும் என்றும் அழியாத பேரின்பத்தை எவரேனும்

வேண்டாமென்று சொல்லுவரோ? இல்லை! இல்லை!! ஆனால், அதனை அடையும் முறையைப் பின்பற்றுவார் அரியராயிருக்கின்றனர். இதனை உட்கொண்டே தருமை ஆதீனங்கண்ட தவராஜயோகியாகிய ஸ்ரீமத் குருஞான சம்பந்தசுவாமிகள் சிவபோகசாரத்துள் நம்மனோருய்ய வேண்டி, நெஞ்சைப்பார்த்துக் கூறுமுகத்தால்,

> ஆசையறாய் பாசம்விடா யானசிவ பூசைபண்ணாய்
> நேசமுட னைந்தெழுத்தை நீநினையாய்—சீசீ
> **சினமே தவிராய் திருமுறைக ளோதாய்**
> **மனமே யுனக்கென்ன வாய்**

என்று அருளியிருத்தல் காண்க. இத்திருப்பாட்டால் ஆசையற்று, பாசம்விட்டு, சிவபூசை பண்ணி, நேசமுடன் ஐந்தெழுத்தை நினைந்து சைவத் திருமுறைகளை ஓதுதலே இறைவனடிப் பேரின்பத்தை எய்துதற்கு ஏற்றமுறையா மென்பது விளங்கும்.

அத்திருமுறைதான் ஒரு முறையல்ல; இருமுறையல்ல; பன்னிருதிருமுறைகளாக விளங்குகின்றன. அவற்றில் அரும்பொருள்கள் மலையெனக் கடலெனக் குவிந்தும் நிறைந்தும் மிளிர்கின்றன.

## சைவத்திருமுறைகள் என்பதன் பொருள்விளக்கம்

சிவசம்பந்தமுடையது சைவம். சிவம் என்னுஞ் சொல்லுக்கு இன்பம், அன்பு, செம்மை எனப்பல பொருள்களுள. மணிவாசகப் பெருமான் 'இன்பமே என்னுடை அன்பே' 'சோதியே சுடரே' எனவும், திருஞானசம்பந்தப்பெருமான் 'செய்யனே திருவாலவாய் மேவிய ஐயனே' 'பொங்கழலுருவன்' எனவும், அப்பர் பெருமான் 'சிவனெனும் நாமம் தனக்கேயுடைய செம்மேனி யம்மான்' எனவும், திருமூலர் 'அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார் அன்பே சிவமாவது யாரும் அறிகுவார்' எனவுங் கூறியுள்ளார்.

இம் மேற்கோள்களால் 'சிவம்' என்னுஞ் சொல்லுக்கு இன்பம், அன்பு, செம்மை என்னும் பொருளுண்மை தெளிவாகும். பின்வந்த தாயுமானவரும் சிவபரம் பொருளை 'தேஜோமயாநந்தமே' 'சச்சிதாநந்த சிவமே' என்ற தொடர்களால் சிவம் ஒளியும், உண்மையும், அறிவும், இன்பமும் வடிவாக விளங்குகின்ற தெய்வமெனச் சுட்டியுள்ளார். ஆகவே 'சைவம்' என்பது உண்மையே, அறிவே, இன்பமே, அன்பே, ஒளியே வடிவாய்த் திகழும் சிவமென்னும் செம்பொருளை முதலாகக்கொண்ட சமயமென்று அறிதல் வேண்டும்.

எம்மதத்தினர் கடவுளை உண்மை, அறிவு, இன்ப, ஒளி வடிவினன் என்று கொள்ளாதவர். சைவசமயக் கோட்பாடுகளெல்லாச் சமயங்கட்கும் தாயகமாயுள்ளன. சைவத்தின் தொன்மையை அளந்தறிய முடியாது. சங்ககாலம் முதற்கொண்டே சிவபெருமான்மேலதாகிய வாழ்த்துக்கள் காணப்படுகின்றன. ஒரு காலத்தில் உலகமுழுதும் சிவவழிபாடே நிலவியிருந்தது. அது பற்றி ஈண்டு விரிப்பிற் பெருகும். அண்மையில் சிந்துநதிக்கரையில் அகழ்ந் தெடுக்கப்பட்ட, ஐயாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டதெனக் கருதப்படும் நகரக் கட்டிடங்களில் ஆங்காங்கே சிவத்திருவுருக்கள் காணப்படுகின்றன. அங்கு வாழ்ந்தவர் நாகரிகமும் திராவிடநாகரிகமெனத் தெரியவருகின்றது. கி. பி. மூன்றும் நூற்றுண்டிலிருந்த மணிவாசகப்பெருமான் "தென்னுடைய சிவனே போற்றி, என்னுட்டவர்க்கும் இறைவா போற்றி" என்று முழங்கியது இக்கால ஆராய்ச்சிக்குப் பெரிதும் அரண் செய்வதாகவே யுள்ளது. இதனையுணர்ந்துதான் 'சைவத்தின்மேற் சமயம் வேறிலையதிற்சார் சிவமாம் தெய்வத்தின்மேல் தெய்வம் இல்'' என்று சைவஎல்லப்ப நாவலரும் கூறினர் போலும்.

இதுவரையும் சைவம் என்பதன் பொருளைக் கண்டோம். இனித் திருமுறைகள் என்பதன் பொருளைப்

பார்ப்போம். இது இருசொல் ஒரு சந்தியா லாகியது. முறை என்பதற்குத் திரு என்பது அடைமொழியாக அமர்ந்துள்ளது. 'திரு' என்பதற்குக் கண்டரால் விரும்பப்படுந்தன்மை நோக்கம் எனப் பொருள்விரிப்பர் பேராசிரியர். மற்றும் திரு என்பதற்குப் பெருமை, திருமகள், செல்வம், அழகு, வீடு என்ற பொருள்களும் உள. ஈண்டுத் திரு என்ற சொல்லுக்கு வீடு (மோட்சம்) என்ற பொருள் ஏற்புடைத்து. 'சென்றடையாத திருவுடையானை' என்றார் சம்பந்தரும்.

'முறை' என்ற சொல்லுக்கு இடைச்சொல், உறவு, ஒழுக்கம், ஒழுங்கு, கிரமம், குணம், தரம், பழமை, புத்தகம், முறைமை, முறையீடு, வரிசை எனப் பன்னிரண்டு பொருள் கொண்டுள்ளார்கள் அடங்கன்முறை ஆராய்ச்சி எழுதிய திரு. அ. சிதம்பரனாரவர்கள். இங்கே சிறப்பாக முறை என்பதற்குப் புத்தகம் (நூல்) என்ற பொருள் ஏற்புடைத்தாகும். கந்தபுராணம் பாடிய கச்சியப்பர் முறை என்ற சொல்லை நூல் என்ற பொருளில் "இறைநில மெழுதுமுன் இளைய பாலகன் முறைவரை வேனென முயல்வ தொக்குமால்" என எடுத்தாண்டுள்ளார். ஆகவே திருமுறைகள் என்பதற்கு **வீடுபேற்றை அடைவதற்குக் கருவியாக உள்ள நூல்கள்** என்பது பொருள். 'அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே' என்றபடி இத்திருமுறைகள் ஓதுவார்க்கு வீட்டின்பம் மட்டுமல்ல, ஏனைய அறம் பொருள் இன்பம் ஆகியவற்றையும் வேண்டுவோர் வேண்டியாங்கு அளிக்க வல்லது என்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

திருஞானசம்பந்தப் பெருமான் திருவெண்காட்டுத் திருப்பதிகத்தில் "பேயடையா பிரிவெய்தும் பிள்ளை யினோடுள்ளநினை, வாயினவே வரம்பெறுவர் ஐயுறவேண் டாவொன்றும்' எனவும், மற்றுந் தாமருளிய தேவாரப் பதிகங்களின் திருக்கடைக்காப்பில் 'திருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே"

நந்தி நாமம் நமச்சிவா யவெனும்
சந்தை யால்தமிழ் ஞானசம் பந்தன்சொல்
சிந்தை யால்மகிழ்ந் தேத்தவல் லாரெலாம்
பந்த பாசம் அறுக்கவல் லார்களே

ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே.

எனவுங் கூறியுள்ள வாசகங்கள் திருமுறையை ஓது வார் எல்லா நலன்களையும் எய்துவர் என்பதை நன்கு விளக்குகின்றன. அப்பெருமான் திருவாக்கை விட நமக்கு வேறு சான்றும் வேண்டுமோ?

இதுகாறுங் கூறியவற்றால் சைவத்திருமுறைகள் என்பதற்கு, சிவமென்னும் செம்பொருளின் திருவடிப் பேரின்ப வீட்டை அடைவதற்குக் கருவியாக அமைந் துள்ள நூல்கள் என்பது திரண்டபொருளா மென்க.

(வரும்)

உ
சிவமயம்
பாலறாவாயர் துணை

சடையுந் தலைமதியுந் தக்கவிழி மூன்றும்
உடையாய் தருமை உறைவாய்—விடையுடையான்
அண்மி யறியவொணு தார்ந்தா னறியிறைவன்
சண்முக மெய்க்தருநீ தான்.

நலம்பெருகுக.

'பால்கவி' இராமநாதன்.

# தேவாரப் பண்கள்

[திரு. S. இராமலிங்க ஓதுவார் அவர்கள், சிதம்பரம்.]

(178-ம் பக்கத் தொடர்ச்சி)

## அடங்கன் முறையிற் காட்டியுள்ள 24 பண்களுக்கும் நாம் காணும் இராகங்களின் விபர அட்டவணை

| பகற்பண் | | இராகம் |
|---|---|---|
| 1. புறநீர்மை | — | பூவாளம் |
| 2. காந்தாரம் | — | நவரோஸ் |
| 3. பியந்தைக்காந்தாரம் | — | ,, |
| 4. கவுசிகம் | — | பயிரவி |
| 5. இந்தளம் | — | நாதநாமக்கிரியை |
| 6. தக்கேசி | — | காம்போதி |
| 7. சாதாரி | — | பந்துவராளி |
| 8. நட்டராகம் | — | ,, |
| 9. நட்டபாடை | — | நாட்டை |
| 10. பழம்பஞ்சுரம் | — | சங்கராபரணம் |
| 11. காந்தாரபஞ்சமம் | — | கேதாரகௌளம் |
| 12. பஞ்சமம் | — | ஆகிரி |

| இராப்பண் | | இராகம் |
|---|---|---|
| 1. தக்கராகம் | — | காம்போதி |
| 2. பழந்தக்கராகம் | — | சுத்தசாவேரி |
| 3. சீகாமரம் | — | நாதநாமக்கிரியை |
| 4. கொல்லி | — | நவரோஸ் |
| 5. கொல்லிக்கௌவாணம் | — | ,, |
| 6. வியாழக்குறிஞ்சி | — | சௌராஷ்டிரம் |
| 7. மேகராகக்குறிஞ்சி | — | நீலாம்பரி |
| 8. அந்தாளிக்குறிஞ்சி | — | சாமா |
| 9. குறிஞ்சி * | | |

## தேவாரப் பண்கள்

### பொதுப்பண்

1. செவ்வழி — எதுகுலகாம்போதி
2. செந்துருத்தி — மத்தியமாவதி
3. திருத்தாண்டகம் — அரிகாம்போதி

குறிஞ்சிப்பண் பாடும்போது அரிகாம்போதி, எதுகுலகாம்போதி ஆகிய இரு இராகங்கள் கலந்து வருவதால் அவ்விரண்டின் கலப்பு இன்ன இராகம் என்று சொல்ல முடியவில்லை; ஆயினும் பிழை என்று சொல்வதற்கு இல்லை என்று இக்கால இசைவாணர்கள் கூறுகின்றனர்.

அட்டவணையிலுள்ள இம்முறையே பாடிவந்த பெரியார்களின் பெயர்கள் வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| வேதாரண்யம் | திரு. | அடங்கன்முறை ஐயா கணபதி தேசிகர் அவர்கள் | |
| திருவிடைமருதூர் | ,, | நாகலிங்கம் பிள்ளை | ,, |
| சங்கமங்கலம் | ,, | ஆபதோத்தாரண தேசிகர் | ,, |
| சுவாமிமலை | ,, | பாலசுப்பிரமணிய தேசிகர் | ,, |
| குரங்காடுதுறை | ,, | சுப்பிரமணிய தேசிகர் | ,, |
| சிதம்பரம் | ,, | முத்துசாமி தேசிகர் | ,, |
| திருவாரூர் | ,, | சுந்தரக்குருக்கள் | ,, |
| திருவாரூர் | ,, | குருசாமி தேசிகர் | ,, |
| கீழ்வேளூர் | ,, | சொக்கலிங்க தேசிகர் | ,, |
| [illegible] | ,, | சாமிநாத தேசிகர் | ,, |
| சிதம்பரம் | ,, | நடராஜ ஓதுவாமூர்த்தி | ,, |

இவர்கள் எல்லோரும் சேர்ந்து பாடும்போது ஒருவர் பாடுவது போலவே பண்முறை ஒத்திருக்கும் என்பது யாவரும் அறிந்ததே. இவர்கள் வழித்தோன்றலாகவுள்ள இப்போது தேவாரம் பாடிவரும் யாவரும் இம்முறையே பாடிவருகின்றார்கள்.

அக்காலத்தில் குருசாமி தேசிகர் அவர்கள் முதல் முதலில் சில பண்களை இம்முறை தெரிந்திருந்தும் புதிதாக மாற்றிப் பாடிக் காட்டினார்கள். இப்போது முழுப்பண்களையும் மாற்றவேண்டுமெனச் சில அன்பர்கள் மாற்றி வருகின்றார்கள். அப்படிச் செய்வது அவசியமா, பொருத்தமா என்பதைப்பற்றிப் பின்னர் ஆராய்வோம்.

உ

குருபாதம்

# பொற்கைப் பாண்டியன்

(கோவை, சிவக்கவிமணி திரு. C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்கள், B. A.)

**அரசநீதியின் குறிக்கோள்**

உலகில் மக்கட் கூட்டத்தார் பல்வேறு வகைப்பட்ட நாகரிகங்களுடன் வாழ்கின்றார்கள். உணவினாலே, உடையினாலே, தனிவாழ்க்கை, குடும்ப வாழ்க்கை, சமூகவாழ்க்கைத் திறங்களினாலே, பொருளுரிமை நலத்தினாலே என்றிவ்வாறு பலவகைகளாலும் மக்கட் கூட்டங்களின் நாகரிக மேம்பாடும் தாழ்வும் நிச்சயிக்கப்படுகின்றன. மக்கள் தோன்றிய காலத்து எவ்வாறு வாழ்ந்தனர்? பின்னர், பல நாடுகளிலும் மக்கட் கூட்டம் இப்போது காணும் வெவ்வேறு நாகரிக நிலைகளை எவ்வாறு படிப்படியாக அடைந்தது? என்று இவற்றையெல்லாம்பற்றி ஆராய்ச்சியாளர் நூல்கள் பலவும் எழுதியுள்ளார்கள். அவற்றைப் பாகுபாடு படுத்திக் கூறுவது எனது இன்றைய பேச்சுக்கு உரியதன்று. ஆனால் மக்களின் பலவேறுவகை நாகரிக ஏற்றத்தாழ்வுகளை அறிவதற்கு அவ்வவர் மேற்கொண்டு வாழும் அரசாங்க முறைகளும் அவ்வவற்றின் இலட்சியமும் பெருங் கருவிகளாகும் என்று துணிந்து கூறுவேன்.

இப்போது எல்லா மக்களையும் அலைத்துப் பெருங் கொடும் துன்பம் விளைக்கும் ஐரோப்பியப் பெரும் போருக்கு நமது எதிரிகளைப் பிடித்து ஆட்டும் மண்ணாசைப் பேய் முதற் காரணமாயினும், அவ்வவர் மேற்கொண்டுள்ள அரசாங்க முறையும் ஒரு துணைக் காரணமாகும் என்று சொல்லலாம். **முடியரசு**, **குடியரசு**, **தனியரசு**, **பொதுவரசு** என்றிவ்வாறெல்லாம் பெயர்பூண்டு வழங்கும் பலவகைப்பட்ட அரசாங்க

முறைகளின் அலைகளால் இந்நாள் உலகம் இன்பமும் துன்பமும் அடைந்து கலங்கி வருகின்றது. அவ்வவர் களும் இன்பமாய் வாழவேண்டுமென்பதே எல் லோருடைய நோக்கமாயினும் அவ்வின்பத்தை எப்படி அடைவது? இன்பமாவது யாது? இன்பவாழ்வு தமக்கு மட்டும் உரியதா? பிறர்க்குமுரியதா? என்பவற்றில் துணிவு இந்நாள் நாகரிக உலகத்துக்கு இன்னும் பிறக்கவில்லை. அரசாங்க நிலையும், குறிக்கோளும், சாதனமும்பற்றி இந்நாள் உலகம் இன்னும் குழந்தைப் பிராயத்தில்தானிருக்கிறது என்பது பல அறிஞர்க ளுடைய கொள்கை.

**பழந் தமிழர் அரச முறை**

ஆனல் அரசாங்க முறை இதுதான் என்று துணிந்த முடிவுடன் எல்லா வுயிர்களையும் பயம் வராமற் காத்தல் வேண்டுமென்ற ஒரே குறியைக் கொண்டு விளங்கியது தமிழ்நாட்டுப் பழங் கால அரசியல். அக்காலம் என்பது இன்று நேற்று என்பதின்றி 5000, 6000, ஆண்டுகளின் முன்பே யாகும் என்று சரித ஆராய்ச்சி யாளர் முடிவுகட்டுகின்றூர்கள். தமிழ்நாடு அந்நாட் களில் சேர சோழ பாண்டியர் என்னும் முடியுடை மூன்று மன்னர்மரபினர்களால் ஆளப்பட்டு வந்தது. முடியுடை மன்னர் இம்மூவரும், இவர்க்குக் கீழ்பட்ட சிற்றரசர்களும் தம் கீழ்வாழும் எவ்வகை யுயிர்களும் எவ்வகையால் வரும் துன்பமும் பயமும் இல்லாமல் வாழும்படி காவல் செய்வதே தமது கடமை என்பதை உயர்ந்த குறியாகக்கொண்டு ஆட்சிசெய்து வந்தனர். இது பழைய சரிதங்கள் பலவற்றுலும் நன்கு விளங்கும். தம் குடிகள் பசியால் வாடாமல் இனிது உண்டும் உடுத்தும் வாழும்படிக்கும், எவ்வகையாலும் அவர்களது உடலுக்கும் உடமைக்குந் தீங்கில்லாமலும் பயமில்லா மலு மிருக்கும்படிக்கும் காப்பதே அரசர் கடமை என் பது தமிழர் கொள்கை. "இத்தனைகாலமு நினது சிலைக் கீழ்த்தங்கி யினிதுண்டு தீங்கின்றிருந்தோம்" என்று

இதனைப் பொத்தப்பி நாட்டு உடுப்பூர் வேடர்கள் தம் அரசனைப் பாராட்டும் முகத்தால் அவர்கள் வாக்கில் வைத்து ஆசிரியர் சேக்கிழார்பெருமான் அறிவிக்கின்றார்.

உயிர்களுக்குத் தன்னாலும், தன் பரிசனத்தாலும், கள்வராலும், பகைவராலும், பிறவுயிர்களாலும் வரும் இந்த ஐந்து வகையான பயங்களையும் வராமற் காத்துத் தருமங் காப்பவனே உலக காவலனாவான் என்று மனுநீதிச்சோழர் தமது மந்திரிகளுக்கு அறிவிக்கின்றார். "மாநிலங் காவலனாவான் மன்னுயிர் காக்குங் காலைத், தானதனுக் கிடையூறு தன்னாற் றன்பரிசனத்தால், ஊனமிகு கள்வராற் பகைவரா லுயிர்தம்மால், ஆனபய மைந்துந்தீர்த் தறங்காப்பா னல்லனோ"? என்று இவ்வாறு உயர்ந்த குறிக்கோளைக் கொண்டிருந்த உலகம் இப்போது பொன்னைவிட்டுப் பித்தளையைப் பிடிப்பவர் போலத் தாழ்ந்த இலட்சியங்களையெல்லாம் விரும்பிப் பின்பற்றத் தொடங்கி விட்டது. சேர சோழ பாண்டியர் மரபுகளின் முன்னோர்களும் இந்த உயர்ந்த குறியையே கொண்டிருந்தார்கள் என்பதற்குப் பல சரித ஆதாரங்கள் இருக்கின்றன.

**சேரர் சோழர்**

தனது மகனுடைய தேர்ச் சக்கரத்தின் கீழ்ச் செலுத்தப்பட்டு இறந்த பசுவின் கன்றி னுக்காகத் தன் தேரை மகனது மார்பின் மீது செலுத்தி அரசநீதியை நிலை நாட்டினர் மனுநீதிச் சோழர். அவ்வாறே தனது செங்கோலின்கீழ் வாழும் மனிதர்மட்டுமேயன்றி, மற்ற விலங்கு முதலிய சீவராசிகளும் துன்பமின்றிப் பாதுகாவல் பெறும்படி வாழ வைப்பது அரசர் கடமை என்று கொண்டனர் 1000 ஆண்டுகளின்முன் வாழ்ந்த சேர அரசராகிய சேரமான் பெருமாள் நாயனார். அதன் பொருட்டு அவர், எல்லாச் சீவராசிகள் பேசும் மொழிகளையும் தாம் அறியுமறிவைக் கடவுளிடம்

வேண்டிப் பெற்றுக்கொண்ட பின்பே முடிசூட்டிக் கொள்ள உடன்பட்டார். அதனுல் அவருக்குக் **கழறிற் றறிவார்** என்ற பெயரும் வழங்கலாயிற்று. அவருக்கு 1000 ஆண்டுகளின் முன்பே வாழ்ந்த சேரன் செங்குட்டு வன் அரசாங்கமும் இக்கொள்கையையே கொண்டிருந் தது என்பது அவர் தம்பியார் இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரம் என்னும் அரும் பெரும் தமிழ்க் காப்பியத்தினுல் இனிது விளங்கும்.

எள்ளறு சிறப்பி னிமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் டீர்த்தோ னன்றியும்
வாயிற் கடைமணி நடுநா நடுங்க
வாவின் கடைமணி யுகுநீர் நெஞ்சுசுடத் தான்றன்
அரும்பெறற் புதல்வனை யாழியின் மடித்தோன்
(சிலப். 20 வழக். 51-55)

என்றும்,

“ புறவுநிறை புக்கோன் கறவை முறை செய்தோன்
(சிலப். வழக். 23-58)

என்றும் அந்த மனுச் சோழர் சரிதத்தையும், தன் னிடம் வந்து அடைக்கலம்புகுந்த புருவின் பொருட்டு அதன் எடைக்கு ஈடாகத் தனது தசையை அரிந்து கொடுத்த சிபிச் சோழர் சரிதத்தையும் கண்ணகியும் தெய்வமும் பாராட்டுவதாக வைத்துப் போற்றுவது காணலாம்.

**பாண்டியர் மரபு**

இனிச் சோழர்கள் போலவே பாண்டிய அரசர் களும் இக்குறிக்கோளையே கொண்டு அரசு செய்தனர் என்பதற்கும் பல பழஞ் சரிதங்கள் உண்டு. அச் சரிதங்கள் உண்மையோ அன்ருே என்ற ஆராய்ச்சி நமக்கு இப்போது வேண்டுவதில்லை. அவை உண்மை யுல்லாவிடின் இத்தனை காலமும் எடுத்துக் காட்டப்பட்டு வழங்கிவரமாட்டா. அவை உண்மைச் சரிதங்களேயாம். அப்படியன்றெனச் சிலர் ஐயப்பட்டாலும் பாண்டிய

மன்னர் குறிக்கொண்டிருந்த உயர்ந்த இலட்சியத்தை அவை விளக்குகின்றன என்பதில் ஐயமே இல்லை. அவற்றுள் **பொற்கைப் பாண்டியன் சரிதம்** சிறந்து விளங்குவதொன்றாம்.

**பொற்கைப் பாண்டியன் சரிதம்**

3000 ஆண்டுகளுக்கு முற்பட்ட மிகப்பழங்காலத்து மதுரையில் அரசுபுரிந்த பாண்டியனொரு வன் தன் வழக்கம்போல் ஒருநாள் இரவில் மாறுவேடம்பூண்டு நகர்சோதனை செய்து போந்தான். அப்போது ஒரு தெருவில் காவலற்ற பழய வீடு ஒன்றில் **கீரந்தை** என்பானோர் வேதியனும் அவன் மனைவியும் பேசிக் கொண்டிருந்தனர். கீரந்தை சிலநாள் தான் வேற்றூர் சென்று வரவேண்டியிருத்தலின் தான் வருமளவும் கற்புநிலை காத்துத் தனித்து ஆற்றியிருத்தல் வேண்டு மென்று தன் மனைவிக்குச் சொன்னான். மக்கள் முதலிய வேறுதுணையில்லாத மனைவி தான் தனியே இருக்கும்போது தனக்குக் காவற்றுணை செய்வார் யார்? என்று கேட்க, அவன் அரசனது நீதியாகிய வேலியே உனக்குக் காவலாகுமல்லது குற்றமற்ற வேறு காவல் வேலியில்லை. "மாதவர் நோன்பும் மடவார் கற்புங் காவலன் காவலின்றித் தங்கா" என்று மொழிந்து அவளைத் தேற்றிச் சென்றான். அதுகேட்ட அரசன் பயந்து தனது அரச ஆணையின்மேற் பாரஞ்சுமத்தி வேதியன் சென்றானாதலின், அவன் வருமளவும் குற்றம் வாராது காத்தல் தனது கடமையென்று கவலையுற்றுத் தினமும் அத்தெருவிற்சென்று காவல்புரிந்து தீதின்மை தெரிந்து வருவானாயினன். பல நாட்கள் இவ்வாறு கழிந் தன. பின் ஒருநாள் அவ்வீட்டில் இருவர் பேசும் சத்தம் கேட்டது. அரசன் மயங்கிக் கீரந்தைதான் திரும்பி வந்தானோ? இஃது அவன் சத்தமோ, வேற்றவன் சத்த மோ என ஐயுற்று, அதனைத் தெளியவேண்டுமென எண்ணினன். "யான் காவலின்றிய இக்கதவம் புடைப் பேன். பேசுபவன் திரும்பிவந்த கணவனாயின், யார்?

என வீரம்படக் கேட்பான்; வேற்றவனுயின் பயந்து மறைந் தொதுங்குவான்; அதுகொண்டு உண்மை துணிவேன்" என்றெண்ணிக் கதவம் புடைத்துத் தட்டினன். அதுகேட்டு உள்ளிருந்த கீரந்தை துணிவுடன் 'யாவனே இந்த நள்ளிரவில் எனது கதவம் புடைத்த அவன்' என்று வீரத்தோடு வினவ, அரசன் உண்மைகண்டு தீதிலது என்று துணிந்து அகல்வான், பின்னுங் கருதுவானுயினன். "இன்று நடு இரவில் கதவம் புடைத்தலைக்கண்ட கணவன், கதவம் புடைத்தவன் இவ்வாறு தினமும் வருவானேர் தீயவனே? அன்றி ஓர் கள்வனே? என்று தன் மனைவியிடம் ஐயங் கொண்டால் அது தீமையாய் முடியுமே! அதற்கு இடம் செய்துவிட்டது அநீதியன்றே? இதற்கு யாது செய்வேன்? என்று மேலும் கவலைப்பட்டு, 'இருபக்கத்துள்ள வீடுகளின் கதவங்களையும் இவ்வாறே புடைத்துச்சென்று விடுவேனுயின் மாந்தர் வேறு ஐயப்படமாட்டார்கள்' என்று துணிந்து அவ்வாறே இரண்டு புறமும் பல வீட்டுக் கதவங்களையும் புடைத்துச் சென்றுவிட்டான். கதவங்கள் புடைத்ததைக்கேட்ட மக்கள் பயந்து எழுந்து கூடி, "நகரத்துக் காவல் பிழைத்தது; ஊரினுட் கள்வன் புகுந்து கலக்கம் விளைத்தனன்; இதனை அரசனுக்கு அறிவித்துக் கள்வனைக் கண்டு முறை செய்யச் செய்வோம்" என்று ஒருங்குசேர்ந்து சென்று, அரச சபையில் அறிவித்தார்கள். அரசன் "அவ்வாறு கலக்கம் விளைத்த கள்வனுக்கு யாது தண்டனை!" என்று கேட்க, அமைச்சர்கள் 'அவன் கையைத் துண்டித்துவிடுதல் வேண்டும்" என்றனர். அரசன் உடனே தன் உடைவாளை உருவித் தன் கையைக் குறைத்து விட்டான். அது கண்ட மந்திரிகளும் மக்களும் இன்னதென்று அறியமாட்டாது மயங்கினர். அரசன் அவர்களுக்கு உண்மையை எடுத்துரைத்து "நானே அக்கள்வன்" என்று கூறினன். அக்குறைத்த கை கடவுள் அருளால் பொன்மயமாக வளர்ந்து விட்டது. அதனல் அவனுக்குப் பொற்கைப் பாண்டியன் என்ற பெயர் வழங்கலாயிற்று.

இவ்வரலாறு 2000 ஆண்டுகளின் முன் இயற்றப்பட்ட சிலப்பதிகாரத்துள், ஆசிரியர் சேரமன்னர் மரபின் வந்த இளங்கோவடிகளால் பாண்டியர்களது நீதிமுறையை எடுத்துக் காட்டுகின்ற வகையால் வளம்பெறப் போற்றப்பட்டுள்ளது.

**சரித ஆதாரவுகள்**

"உதவா வாழ்க்கைக் கீரந்தை மனைவி
புதவக் கதவம் புடைத்தன ளொருநாள்
அரச வேலி யல்ல'தியாவதும்
புரைதீர் வேலி யில்லென மொழிந்து
மன்றத் திருத்திச் சென்றீ ரவ்வழி
யின்றவ் வேலி காவாதோ? வெனச்
செவிச்சூட் டாணியிற் புகையழல் பொத்தி
நெஞ்சஞ் சுடுதலி னஞ்சி நடுக்குற்று
வச்சிரத் தடக்கை யமரர் கோமான்
உச்சிப் பொன்முடி யொளிவளை யுடைத்தகை
குறைத்த செங்கோற் குறையாக் கொற்றத்
திறைக்குடிப் பிறந்தோர்க் கிழுக்க மின்மை"

சிலம்பு-கட்டுரை 42—53

என்பது காண்க. மேலும், இவ்வரலாறு கடைச்சங்க மருவிய பதினெண்கீழ்க்கணக்கு என்னும் நூல்களுள் ஒன்றாகிய பழமொழியிலும்,

"எனக்குத் தகவன்று லென்பதே நோக்கித்
தனக்குக் கரியாவான் றானாய்த்—தவற்றை
நினைத்துத்தன் கைகுறைத்தான் பாண்டியன் கணா
ரேனச் செய்யார் மாணவினை."

அதாவது தனக்குச் சாட்சியாவார் தானேயன்றிப் பிறர் ஒருவருமில்லாவிடினும் தன்செயல் தகுதியற்ற தென்பதொன்றையே கருதித் தன்குற்றத்துக்காகப் பாண்டியன் தனது கையைத் தானே குறைத்துக் கொண்டான் அது போல வேறெவரும் பார்ப்பவர் இல்லை என்று எண்ணி நல்லோர் தகுதியற்ற செயலைச்

செய்யமாட்டார்கள் என்று எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. திருவிளையாடற் புராணத்தினுள் பழியஞ்சிய படலத்தில், தன் மனைவியை வேடன் கொன்று விட்டான், முறையோ! என்று அரசனிடம் முறை சொல்லும் வேதியன் வாக்கில் வைத்து, பாண்டியர்களது மெய்க்கீர்த்திகளுள் ஒன்றாகக் காட்டித் "தீமை செய்தாய்போற் செங்கை குறைத்தாய் முறையேயோ" என்று இவ்வரலாறு போற்றப்பட்டுள்ளது.

இவ்வாறு மிக உயர்ந்த இலட்சியங்களையெல்லாம் எடுத்துக் காட்டுகின்ற பெரிய புராணம் முதலிய பழம் பெரு நூல்களைப் போற்றிப் பாதுகாத்து வரவேண்டியது தமிழ் மக்களின் கடமையாகும்.

**முடிபு**

இதுவரையும் பேசியவற்றால் பழங்காலத்துத் தமிழரரச முறைப்படி உயிர்களைத் தீமை வாராது தம்முயிர்போலக் காவல் செய்வதில் அரசர் கண்ணும் கருத்துமாய்க் குறிவைத்திருந்ததுவும், அதன் பொருட்டு அஞ்சி இரவில் மாறுவேடம் பூண்டு நகர்காவல் செய்த நல் வழக்கமும், தம் ஆட்சியில் வாழும் உயிர்களுக்குப் பயம் வரும்படி செய்தாலும் அது குற்றமாகும் என்று கொண்ட மேம்பட்ட கொள்கையும், வேறு சாட்சியின்றித் தானே குற்றம் செய்யினும் அதற்குத் தன்னைத் தானே தண்டித்துக் கொள்ளும் நேர்மையும் பிறவும் நன்கு விளங்கும்.

---

1. திருச்சிராப்பள்ளி அகில இந்திய வானொலி நிலையத்தில் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவு.

# ஞானமகளார் மார்பணி நன்மணி

(வித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள், திருவாரூர்.)

அருட்குரவர் அடிகளை யடைந்துய்ந்த பெருமக்கள், அருட்குரவர்களைப் பலவகையான் அறிந்து, வியந்து அனுபவிக்கின்றனர். இன்பவுள்ளம் எய்துகின்றனர். இன்பவெள்ளத் தாழுகின்றனர். தன்னையு மறந்து குருவடிவாய்த் திகழ்கின்றனர். அங்ஙனம் அருட்குரவர்களை அனுபவிக்குமுறையில் ஓரிடத்து உழவனாக, பேரரசனாக, கணவனாக, ஞானப் பெண்ணின் நல்லணி மணியாக எல்லாம் அனுபவித்திருக்கின்றனர். அங்ஙனமாய அனுபவமுறை பலவற்றுள் மணியாகக் கண்ட காட்சியை நுணுகி நோக்கும் திறம்படைத்த செட்டிமகனாகும் திருவருள் உடையேம். ஆகலின் ஒருவாறு நோக்குவோம்.

அழகிய தாமரை. நூறு இதழ்களையுடையது. பொன்னிறப் பொடியைக் கொட்டுவது. இத்தாமரையில் எழுந்தருளியிருப்பவன் பிரமன். பல்வகை யண்டங்களைப் படைப்பவன். வேதம் கற்றவன். அவனும் காணாத அருமணி. தேன்குடம் உடைந்தாற்போலத் தேனும் மணமும் சொரியாநிற்பது திருத்துழாய். அதனை யணிந்து காத்தற்றொழிலில் சிறந்தவர் திருமால். அவரும் தேடியடையாத பெருமணி. இருவரும் எங்ஙனம் தேடினர். தமது மூலமலத்தின் முனைப்பாற்றேடினர். திருவருளே கண்ணாகக் கண்டிலர். அதனாற் பயன் எய்திற்றிலது. பயன் எய்தாமைமட்டுமல்ல. தேவ நிலையைத் துறந்தனர். அடுத்த மக்கள் நிலையினும் அன்றி விலங்காயினர் விஷ்ணு; பறவையாயினர் பிரமன். அங்ஙனம் ஆகியும் அலைந்தனர்; அடைந்திலர். அத்தகைய சிவமணியாம் குருமணி எம்மீது வைத்த

கைம்மாறில்லாக் கருணையால் எங்களைப்போல மானுடச் சட்டைசாத்தி வெளிப்பட்டது. எல்லையற்ற இன்பம் அளித்தது. பேச்சிலாப்—பிரிவிலாப்—பெருவாழ்வு அடையச் செய்தது. அம்மட்டோ!

பசிய இலை நடுவே இதழ்விரித்து மகிழ்விக்கும் தாமரையோடைகள் சூழ்ந்து தமிழ்வளங் கொழிக்கும் திருவாரூரில் ஞானச் செங்கோல் நடாத்திய ஞானப் பிரகாச நற்காவலன் கருணை பழுத்த அருண்மணி யாயிற்று. ஞானமாகிய உள்ளத்துறவு கொண்டார் விழையும் பெண். அவள் கழுத்தில் விளங்கு நல்லணி **சைவம்;** அவ்வணியின் நடுநாயகமணி. இம்மணிக்கு **மாசிலாமணி** என்று திருநாமம்.

இன்னும், இம்மணி திருஞானசம்பந்தப் பெருமான் இளமை கழிந்து முதுமை எய்தியபோது நிகழக்கூடும் காட்சியை இன்று காட்டி நிற்கின்றது. அத்தகைய மணியை வேண்டி அடைவது என்ன? யானை. சிவ ஞானமாகிய யானையை. ஏன்? இருகால்கள் மேற் கட்டப்பெற்ற யானை கட்டுமிடத்தில் ஐந்து யானைகள் (இந்திரியங்கள்) கூடியலைக்கின்றன. பிறவிக்காட்டிற் புகுத்துகின்றன. காட்டிற் புகாது தப்பவேண்டும். பேரின்ப நாட்டைப் புகவேண்டும். யானைகளின் கொடுமைகளிலிருந்து தப்பவேண்டும். அதற்கு சிவ ஞானமாகிய யானைதான் வேண்டும்.

தொகுத்து நோக்கின், ஞானப் பெண்ணின் மார்பில் விளங்கும் சைவ மாலையில் தலை மணியாய் விளங்கும் மாசிலாமணி தேசிக நன்மணி, கமலை ஞானப் பிரகாசரின் கருணைச் செல்வமாய், அருளரசாய், முதுமைநலம் காட்டும் ஞானசம்பந்தராய் விளங்குகிறது என்பதும், அதனை வணங்கின் ஞானயானையை அருட் பரிசாக அளிக்கும் என்பதுமாகிய கருத்துக்கள் காணக்கிடக்கின்றன.

மாசிலாமணி என்பது ஒரு சிந்தாமணி; எண்ணியவற்றை ஈயும்மணி. ஆதலால் அதனைப்போற்றிச் சிவஞானக்களிறுபெற்றுச் சிந்திப்பரிய சேவடிக்கரையைச் சேரலாம். அதற்கு ஒருவழி திருத்தருமபுரம் சென்று சேர்தலே என்பது உறுதியாகின்றது.

இக்கருத்துக்களை யளித்துக் கனியவைக்குங் கற்பனைப் பாடல் "பூமலி சததளப் பொன்னந் தாதுகு" என்னும் **பண்டார மும்மணிக்கோவையின்** முதன் மணியாம் திருப்பாடலாகும். இது குமரகுருபர அடிகள் அருள்வாக்காய் நிற்பது.

**"ஞானசம்பந்தம்"**

**வாழ்த்து.**

அடியார்க் கருள்செய் யணிகறை மிடறெனவ
வடிகொள் தேமழை வழங்கு கார்ப்பெயல்
கார்த்திகை வந்தது கார்த்திகை வந்தது
பரந்தெழும் இரண்டெனும் ஆண்டு பிறந்தது
சண்முகத் தருவின் தண்ணருள் பொழியும்
ஞானசம் பந்த நன்மலர் வந்தது
சிவமணம் சேர்ந்து தவத்தேன் பிலிற்றி
அன்பு காயளித்து அருட்கனி கொடுக்க
ஞானசம் பந்த நன்மலர் பூத்தது
இம்மலர் இரண்டாண் டினியநன் மலராம்
மலர்மணம் நுகர்ந்து மாநிலம் வாழ்க!
வாழ்க சண்முகர் மலரடி வாழ்க!
ஞானசம் பந்த நற்றாள் வாழ்க!
படித்துப் பயன்பெறு மிடியிலா அறிவர்
நல்லருள் பெற்று நன்கு வாழியவே!

—வித்துவான், ச. தண்டபாணி தேசிகர்.

# The Gleanings From Saiva Siddhantha

(Sri. Shanmukhasundaram Chettiar, Madras.)

(Continued from page 192)

## 3. The Existence of God Supreme (contd.)

Some urge that the Universe is dissolved in Maya and it emanates from it. But the acceptance of this statement would demand an explanation for the inequalities that are manifested in the creation. Birds, animals, men, and other beings differ from one another in various ways both as individuals and groups. The difference would naturally lead one to presume that God, the creator is partial and unjust and has both likes and dislikes. In his examination of this argument, Sivajnana Munivar states that like seed which sprouts when the earth is made wet, the primordial principium, having its abode in the energy of Sakthi of God, issues forth under the direction and will of the Sakthi. It is therefore obvious that the Universe, which is evolved out of Maya, emanates from the Sakthi wherein lay the maya in its primordial form. The endless variety in creation is due entirely to the instrumental cause viz., Karma, and the justice and grace of God are, on that ground, never endangered. The fruits of Karma are linked with the souls in accordance with their desires, and God's duty therefore amounts to be mere fulfilment of soul's wishes. Without seed no plant will never shoot up from the earth.

Similarly, without Maya, the Universe will not issue forth from God.

The adoption of Karma to explain the inequalities in creation makes some to urge that God is not necessary as the Karma itself can effect creation. But it has to be remembered that the Karma is inactive and that there is nothing of power or agency included in it. It needs therefore some agent for its operation. A calf is fed with milk that flows from the cow's udder. A magnet attracts a piece of iron. In the absence of an agent in their case, what is desired never happens voluntarily. If the milk can itself automatically flow from the udder, it should flow even from the udder of a dead cow. The milk does not flow from the udder when the soul in the vesture of a cow is absent. Unless a person brings a magnet in contact with a piece of iron, the attraction does not take place.

Some desire to assign this agency-ship to souls themselves, on the ground that the Karma possesses no intelligence, and is inanimate, and that as the souls are endowed with wisdom they can effect creation and other processes. But these souls are themselves inert as they are in bondage and have no freedom. The actions of their bodies and the senses contained therein are operated and controlled by God. We find that all sensations arise through sense-organs in the body and that one is not aware of sensation when mind is not in contact with the sense organs. The sense organs do not themselves know what

they do but the soul which inhabits in the body understands the several sensations. Likewise the soul cannot know or enjoy unless God endows it with the power and energy to understand a particular thing.

It is urged that souls free from such imperfections can perform these functions. But a question may arise whether such souls are those who have been set free from bondage or those who are naturally and eternally free from all imperfections or bondage. The latter is God and God alone. As for the former, it is evident that there is an agent beyond them who bestows on them that gift of freedom and the eternal bliss.

It has been stated by some on the analogy of the potter that in performing the function of creation, God will be bound up with all imperfections even as a potter when he makes a pot. An action is generally performed either by thought or Sankhalpa that this shall be done in this manner or by necessary instruments. A potter cannot operate by his Sankhalpa alone but he requires instruments as well. But God's energy or Sakthi operates merely by Sankhalpa. When functions are performed by Sankhalpa, the bondage, avidya and other infirmities never bind the operator, God. A potter produces a jar. He has a thorough knowledge of the form of the jar and the materials and instruments he has to employ for its production. By this thought-process the jar cannot be made, but he should place the clay on a wheel and perform all processes quite

necessary for manufacturing the jar. Unlike the potter, God makes his Sankhalpa that a certain thing should be made in a certain manner and the production takes place as though that thing shoots forth by its own voluntary effort.

It is also urged that a jar is certainly produced by the potter but in addition to the knowledge of his material, his desire, and action, he must have a body in order to bring about the result and therefore God must have a body. Berkeley remarks, that a human spirit or person is not perceived by sense. The soul by itself has no form to be perceived by sense and it moves, by its volition, the body it inhabits. Like the formless soul, God, who has no form, creates the Universe and subjects it to other processes as well. It is a known maxim that all forms are products of causes and under the same category, God who has a form must be produced of a cause. It will be endless to trace causes that preceded and the postulate, that God has no form is a necessity. As the encasement in a form or body limits the power of action, God without assuming a form created the Universe through the medium of His Energy and through His will He assumes several forms.

A person who has seen a pot and a potter making it, infers in the absence of a potter at the sight of another pot, that a potter has made it. Such inference is not possible in the case of the creation of the Universe by God as no individual has ever seen another world and a God

who created it. The invariable concomittance or avinabhavam is therefore absent. One has seen smoke and fire together at a hearth. Subsequently at another hearth he perceives only smoke and he infers that the hearth has fire. This may be conceded that the smoke and fire are from two hearths and the characteristics are quite in common with each other. Some think that there is difference between the smoke in the small hearth and that on a big mountain and the inference here is not possible. It can be determined on account of the presence of common characteristics existing in the smoke in the hearth and that on the mountain. It is therefore evident that one individual, who has seen an object and its operator together at a place can infer at the sight of another object, that it has creator on the ground, that both operators belong to one and the same class of operators. The Universe has therefore a God who evolves it from Maya wherein it lay dissolved.

Saint Meikandar thus determining the existence of God, proceeds in his third section to prove that this world projecting diety is the God Supreme. Mr. Mackenzie writes in his "Conception of Diety" "that our Universe is to be thought of as a particular system brought into being by a contingent choice in a manner somewhat analogous to that of the imaginative creation of a human artist. The supreme object of that creative process may be supposed to be the production of a society of persons each of whom has limited power of choice relatively independent,

but controlled by the general purpose of the creative power; just as the characters in a play express their individuality subject to the structure of the plot". Sivagnana Munivar expresses this very same idea. He cites the analogy of a temple chariot or car executed by several carpenter's under the supervision of one, who is a master of the art. The Universe is big enough to demand plurality of Gods like Vishnu, Brahma, Indra and a host of others for its creation and other process of change. Like the chariot that is executed under the supervision of one master-carpenter, the Universe . is created under the guidance of the one and supreme God, who is the disposer of all. He does all functions either by himself or through the instrumentality of others. Only an expert can be at the head of a body of artists, as he possesses greater knowledge and experience in the line. As Gods or Devas are of a lesser order and as omniscience, omnipotence and other allied attributes are possessed only by the Supreme Being. It alone can be the head of these gods whose knowledge and power are limited. Saiva Siddhantha assigns this supremacy over Gods to Paramasivam, the Absolute, and from a study of the Universe perceived, the existence of God Supreme is proved and established by a method quite compatible with the development of modern science.

*(To continue)*

பிரமோற்சவத்தில் 12, 13, 14, 18—4—43 நான்கு நாட்களிலும் வித்துவான், திரு. அருணைவடிவேலு முதலியார் அவர்கள், வித்துவான், திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்கள், காஞ்சிபுரம் திரு. க. வச்சிரவேலு முதலியார் அவர்கள், B. A., L. T., வித்துவான், திரு. த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் ஆகிய நால்வர்களும் முறையே 'ஒப்பரும் அற்புதம்', 'சம்பந்தரும் உடனடியார் களும்', 'கண்முன்வருதியானப் பொருள்', 'ஞானசம்பந்தர் நற்கருணை', என்னும் பொருள்கள் பற்றிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள்.

திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் நடந்த பிரமோற்சவத்தில் 14, 15, 16—4—43 ஆகிய மூன்று நாட்களிலும் முறையே வித்துவான், திரு. வை. குஞ்சிதபாதம்பிள்ளை அவர்கள் 'அப்பூதியடிகள்' என்பது பற்றியும், வித்துவான், திரு. S. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் 'கடவூர் கலயர்' என்பது பற்றியும், "பாலகவி" வயிநாகரம் திரு. இராமநாதன் செட்டியார் அவர்கள் 'அம்மையப்பர்' என்பதுபற்றியும் விரிவுரைகள் நிகழ்த்தினார்கள்.

திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் நடந்த பிரமோற்சவத்தில் 12, 15—4—43 ஆகிய இரண்டு நாட்களிலும் பவானி, திரு. குமார. ஞானசம்பந்தம் பிள்ளை அவர்கள் 'சொல்லாமற் சொன்னது' என்பதுபற்றியும், வித்துவான், திரு. அருணைவடிவேலு முதலியார் அவர்கள் 'மாதவக் கலயனார்' என்பது பற்றியும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள்

## மதிப்புரை

**திருக்குறளும் காந்தியடிகளும்**

தேசசேவையே தம் குறிக்கோளாகக் கொண்டுள்ள காந்தியடிகளுடைய வாழ்க்கை அனுபவக் குறிப்புக்களை முதல் இரண்டடியிலமைத்து, பிற்பகுதியில் அவ்வவ்வனுபவத்திற்கேற்ற குறட்பாக்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. உலகப் பெரியார்களின் சரிதத்தில் உலகப் பெருநூல்களில் ஒன்றை அனுபவமாக உவமித்துக்காட்டி பொதுமக்களுக்குக் குறளின் மேன்மையை வற்புறுத்த ஆசிரியர் முயன்றிருப்பது போற்றற்குரியது. ஆசிரியர் திருக்குறள் அஷ்டாவதானம். திரு. ப. சுப்பிரமணியதாஸ் அவர்கள். விலை ரூ. 1—0—0.

கிடைக்குமிடம்:- திருவள்ளுவர் கழகம்,

திருத்தருமபுரம் ஸ்ரீ ஞானபுரீஸ்வர சுவாமிக்கு 16-5-43 முதல் பிரமோற்சவம் நடைபெறும். 25-5-43-ல் இவ் வாதீன மடாலயஸ்தாபகர் ஸ்ரீமத் குருஞானசம்பந்தசுவாமிகள் குருபூசையும், 26—5—43-ல் பட்டினப் பிரவேசமும் நடைபெறும். அதுபோது பல பேரறிஞர்களைக் கொண்டு சைவத் திருமுறைச் சொற்பொழிவுகள் செய்விப்பதற்கும், திருமுறைப் பாராயணம் செய்விப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இவ்வாதீனத்துக்குச் சொந்தமான ஆச்சாள்புரம் ஸ்ரீ சிவலோகத்தியாகராஜ சுவாமிக்கு 10—5— 3 முதல் மகோற்சவம் நடைபெறும். அதுபோழ்தும் வழக்கம்போல் சைவ சமயச் சொற்பொழிவுகளும், திருமுறைப் பாராயணமும் நடைபெறும்.

## "ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் தமிழ்த் திங்கள் வெளியீடு.

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சைவசமயச்சார்பாய் எழுதப்படும் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் முழு உண்மைகளை உணர்வதற்கும் தமிழறிவைப் பெறுதற்கும் பெருந்துணையாவது.

### ஆண்டுக் கையொப்பம்

| | |
|---|---|
| உள்நாடு (இந்தியா, இலங்கை) அஞ்சற்கூலியுள்பட | ரூ. 1—8—0 |
| வெளிநாடு ... ... ... ... | ரூ. 2—0—0 |

குறிப்பு:— தனிப்பிரதி கிடையாது. ஓராண்டிற்குக் குறைந்த கையொப்பம் இல்லை.

செயலாளர்,
"ஞானசம்பந்தம்" காரியாலயம்,
ஷண்முகவிலாசம்,
தருமபுரம், மாயவரம்.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adheenam at The Gnanasambandam Press, Dharmapuram, (Mayavaram).